www.kalvisolai.com

## பதினோறாம் வகுப்பு மாதிரி வினாத்தாள்

மதிப்பெண் : 90

## இந்திய பொருளாதாரம்

காலம்: 2 ½ மணி

### பகுதி – அ

(20 x 1 = 20)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. புதிய பொருளாதாரத்தின் தந்தை என்றழைக்கப்படுபவர்
(அ) ஆடம்ஸ்மித் (ஆ) மார்வுல்
(இ) காரல் மார்க்ஸ் (ஈ) கீன்சு

2. மக்கள் தொகை இவ்விதத்தில் அதிகரிக்கிறது என்று மால்தஸ் கூறியது
(அ) விகிதாச்சார விதத்தில் (ஆ) பெருக்கல் விதத்தில்
(இ) கூட்டு விதத்தில் (ஈ) வளர்ச்சி விதத்தில்

3. ஜவஹர் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
(அ) ஆகஸ்ட் 1995 (ஆ)அக்டோபர் 1993
(இ) ஏப்ரல் 1999 (ஈ) டிசம்பர் 1997

4. மொத்த நாட்டு உற்பத்தி (GNP) – தேய்மானம்
(அ) செலவிடத் தகுதியான தனி (PDI)
(ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)
(இ) நிகர நாட்டு உற்பத்தி (NNP)
(ஈ) X - M

5. தொலைநோக்கு திட்டத்திற்கான கால அளவு
(அ) 5 ஆண்டுகள் (ஆ) 10 ஆண்டுகள்
(இ) 20–25 ஆண்டுகள் (ஈ) 15 ஆண்டுகள்

6. பசுமைப் புரட்சியால் குறிப்பாக இவ்வகை உணவு உற்பத்தியில் பெருக்கம் ஏற்பட்டது
(அ) அரிசி மற்றும் கரும்பு
(ஆ) கேழ்வரகு மற்றும் அரிசி
(இ) கோதுமை மற்றும் கரும்பு
(ஈ) அரிசி மற்றும் கோதுமை

www.kalvisolai.com

7. மைய வங்கியின் மிக முக்கியமான பணி
(அ) பொது மக்களுக்கு கடனும் முன்பணமும் வழங்குவது
(ஆ) வைப்புத் தொகையைப் பெறுவது
(இ) காகிதப் பணத்தை வெளியிடுதல்
(ஈ) வங்கிகளிடையே கடன் பெறுதல்

8. OPEC நாடுகள்
(அ) ஜெர்மனி, ருமேனியா, ரஷ்யா,
(ஆ) ஆப்பிரிக்கா, இலத்தின் அமெரிக்கா, ஆசியா
(இ) பெல்ஜியம், பிரான்சு, ஜெர்மனி
(ஈ) ஈரான், ஈராக், குவைத்

9. மிக அதிக நிலைத்தன்மையுடைய மாறுபாட்டு அளவை
(அ) பரவற்படி (ஆ) சராசரி
(இ) இடைநிலை (ஈ) முகடு

10. கீழ்க்கண்டவற்றுள் மிக முக்கியமான வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்
(அ) இரும்பு எஃகு (ஆ)சிமெண்ட்
(இ) சர்க்கரை (ஈ) சணல்

11. கீழ்க்கண்டவற்றுள் எது இடைநிலை பண்டம்
(அ) சிமெண்ட் (ஆ) தொலைக்காட்சி பெட்டி
(இ) குளிர்பானங்கள் (ஈ) இரு சக்கர வாகனம்

12. உலக வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
(அ) 1983 (ஆ) 1844
(இ) 1948 (ஈ) 1944

13. இந்தியத் திட்டக்குழு “ஏழ்மையை” இதன் அடிப்படையில் வரையறுத்துள்ளது
(அ) வருமானம்
(ஆ) நுகர்வு
(இ) உணவு பொருள் மூலம் பெறும் கலோரி
(ஈ) வேலைவாய்ப்பு

14. அறிவியல் சமதர்மத்தை தோற்றுவித்தவர்
(அ) ஆடம்ஸ்மித் (ஆ) டேவிட் ரிகார்டோ
(இ) J.S.மில் (ஈ) கார்ஸ் மார்க்ஸ்

15. ஸ்டேஸ் (Status) என்ற லத்தீன மொழி குறிப்பிடுவது
(அ) தர்க்கவியல் (ஆ) அறிவியல்
(இ) பொருளியல் (ஈ) புள்ளியியல்

16. முகடு என்பது
(அ) பரவலின் பொதுவான உறுப்பு
(ஆ) மையத்தில் அமைந்திருக்கும் உறுப்பு
(இ) மிகப்பெரிய மதிப்பு
(ஈ) மிகச்சிறிய மதிப்பு

17. இந்தியாவில் முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு
(அ) 1947
(ஆ) 1951
(இ) 1956
(ஈ) 1961

18. வேளாண்மை உற்பத்தியை அளவிடும் முறை
(அ) உரத்தின் நுகர்வளவு
(ஆ) நீர்பாசன வசதி
(இ) நிலம் மற்றும் உழைப்பின் உற்பத்தி திறன்
(ஈ) எந்திரமயமாதல்

19. பண்டமாற்று முறையில் உள்ள முக்கிய இடர்பாடு
(அ) பரிமாற்ற முறையானது எண்ணற்றவையாகவும் கடினமானதாகவும் இருத்தல்
(ஆ) இருமுகத் தேவை பொருத்தமின்மை
(இ) இடைப்பட்ட பண்டம் எல்லோரும் அறிந்திருக்க வேண்டிய அவசியம்
(ஈ) வீட்டு உற்பத்தி முறை நடைமுறையில் இருத்தல்.

20. கல்வி என்பது ஒரு
(அ) நுகர்வுப் பண்டம் (ஆ) மூலதனப் பண்டம்
(இ) எதுவுமில்லை (ஈ) இரண்டும்

## பகுதி – II

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும், அவற்றில் வினா எண்.30–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 7 x 2 = 14

21. ரோஸ்டோபின் பொருளாதார வளர்ச்சி நிலைகளை கூறவும்.
22. இந்தியாவில் கற்றவர்களிடையேயுள்ள வேலையின்மையை எவ்வாறு தீர்த்து வைக்கலாம்?
23. மகலனோபிஸ் யுக்தி முறை என்பது யாது?
24. பொருளாதார முன்னேற்றத்தில் வேளாண்மையின் பங்கினை விளக்குக.

www.kalvisolai.com

25. பயன்பாட்டின் அடிப்படையில் தொழில்களை வகைப்படுத்துக.
26. வெளிச்சந்தை நடவடிக்கை என்றால் என்ன? இந்தியாவில் இதனை கடைபிடிக்கும் வங்கி யாது?
27. பணம் என்றால் என்ன? பணத்தின் ஏதேனும் இரண்டு பணிகளை கூறுக.
28. மனித வள மேம்பாட்டு குறியீடு எவ்வாறு கணக்கிடப்படுகிறது?
29. ஐந்து பாடங்களில் மாலா பெற்ற மதிப்பெண்களிலிருந்து வீச்சை கணக்கிடுக.
    68, 42, 86, 38, 40
30. நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான குறியீடுகள் யாவை?.

## பகுதி – III

(7 x 3 = 21)

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும், அவற்றில் வினா எண். 40–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31. நம் நாட்டில் பின் தங்கிய பொருளாதார நிலை எவ்வாறு பிரதிபலிக்கப்படுகிறது?
32. மக்கள் தொகை வளர்ச்சிக் கட்டத்தை வரைப்படத்துடன் விளக்குக.
33. வேலையின்மை அளவீடுகளை கூறுக.
34. நாட்டு வருமானத்தின் துறை வாரியான அமைப்பினைப் பற்றி குறிப்பு வரைக.
35. சுழற்திட்டம் என்றால் என்ன?
36. வேளாண் அங்காடியின் முக்கியத்துவத்தை விளக்குக.
37. அ) நெசவுத் தொழில் சிறு குறிப்பு வரைக.
    ஆ) நெசவுத் தொழிலில் காணப்படும் பிரச்சனைகள் யாவை?
38. ரிசர்வ் வங்கியின் கடன் தன்மை கட்டுப்பாட்டு முறைகள் யாவை?
39. ஒரு வகுப்பில் உள்ள 10 மாணவர்களின் மதிப்பெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. கூட்டு சராசரி மற்றும் இடைநிலை கணக்கிடுக.
    மதிப்பெண்கள்: 45, 60, 45, 60, 50, 30, 55, 20, 10, 25
40. சமனற்ற மக்கள் தொகை வளர்ச்சியை சரி செய்ய மால்தஸ் கூறும் இரு வகையான தடைகளை விவரி.

www.kalvisolai.com

## பகுதி – IV (7 x 5 = 35)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்**

1. பின்தங்கிய நாடுகளின் எவையேனும் ஐந்து இயல்புகளை விளக்குக
(அல்லது)
நிலையான மக்கள் தொகையை பெறுவதற்கான வழிமுறைகளை கூறவும்.

42. கிராமப்புற வேலையின்மை மற்றும் நகர்ப்புற வேலையின்மையை வேறுபடுத்துக.
(அல்லது)
நாட்டு வருமானம் என்றால் என்ன? வருமான முறையில் நாட்டு வருமானம் கணக்கிடுவதை விளக்குக.

43. பின்தங்கிய நாடுகளின் திட்டமிடுதலின் முக்கிய பிரச்சனைகளை எடுத்துரைக்கவும்.
(அல்லது)
இந்திய வேளாண்மையில் உள்ள இடர்பாடுகளை களைய ஏதேனும் நான்கு முறைகளி கூறி அதனை விவரி.

44. பொருளாதார வளர்ச்சியில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி.
(அல்லது)
மைய வங்கிக்கும் வணிக வங்கிகளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

45. உலகமயமாதலின் அளவீடுகள் யாவை?
(அல்லது)
வாழ்வொளி திட்டத்தை விவரித்து அதனை பள்ளியில் எவ்வாறு நடைமுறைபடுத்தலாம் என்பதை கூறு.

46. ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளியின் தினக் கூலியானது (ரூபாயில்) கீழ்க்கண்டவாறு

| தினக்கூலி (ரூ) | 90-110 | 110-130 | 130-150 | 150-170 | 170-190 | 190-210 | 210-230 |
|---|---|---|---|---|---|---|---|
| தொழிலாளர்களின் எண்ணிக்கை | 3 | 6 | 10 | 15 | 24 | 42 | 75 |

தொழிலாளர்களின் தினக்கூலியின் கூட்டுச் சராசரியை கணக்கிடுக.
(அல்லது)

குறியீட்டெண் என்றால் என்ன? அதன் பயன்களை விவரி.

www.kalvisolai.com

47. நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் போது ஏற்படும் பிரச்சினைகளை சுருக்கமாக விவரி.

(அல்லது)

வணிக வங்கியின் கீழ்கண்ட பணிகளை விளக்குக:-

i. கடன் உருவாக்கம்
ii. முகமைப் பணிகள்

------